<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO.27/2015

Deposition of Witness PW-1

| | |
|---|---|
| Name | : பாலசுந்தரம் |
| Father's Name /W/o | : ராஜி ரெட்டியார் |
| Religion | : இந்து |
| Caste | : ரெட்டியார் |
| Calling | : விவசாயம் |
| Address | : மாங்காட்டுச்சேரி (கிராமம்) |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 19.06.2018

குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

தாவாவை 3.3.2015ல் நான் தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரி. தாவா சொத்தை 9வது பிரதிவாதி 2014ம ஆண்டு கிரையம் பெற்றாரா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் முள்வேலிகளை அகற்றும் போது 9வது பிரதிவாதி அவர் கிரையம் பெற்றதாக சொன்ன போது தான் தெரிய வந்தது. தாவா சொத்தில் 9வது பிரதிவாதி ஒரே ஒரு மரத்தை வெட்டினார் மற்ற மரங்களை வெட்டுவதற்கு முன்பே சொத்து என்னுடையது என்று சொல்லி நான் அவரை தடுத்துவிட்டேன். தாவா சொத்து எனக்கு உரிமயான சொத்து என்று காட்டுவதற்கு என்னிடம் ஆவணம் எதுவும் இல்லை. தயாளனுக்கு பட்டா எண். 1195 அரசாங்கத்தால் வழங்கட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி மேற்படி விவரங்கள் சொல்லி பதிலுரை தாக்கல் செய்த பிறகு தாலுக்கா அலுவலகத்தில் சொத்து சம்மந்தமான பட்டா யார் பெயரில் உள்ளது என்ற விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்து என்னிடத்தில் தான் உள்ளது. 9வது

பிரதிவாதி மரம் வெட்டி தகராறு செய்ததால் தான் அதன் பிறகு நான் நீதிமன்றத்தில் நான் தாவா தாக்கல் செய்தேன். தாவா சொத்துக்கு கட்டப்பட்ட வரி ரசீதுகள் தயானந்தன் மற்றும் அவரது மகன்கள் பெயரில் தான் உள்ளது. என் பெயரில் எந்த வரி ரசீதும் கிடையாது. ஒப்பந்தம் போடும் பொழுது சொத்து விவரம் அதில் சொல்லப்படவேண்டும் என்றால் சரி. தயானந்த முதலியாருடன் ஒப்பந்தம் போடும் பொழுது சொத்து அவருக்கு எப்படி வந்தது என்று மூல பத்திரத்தை பார்த்து விட்டு தான் கிரைய பத்திரம் எழுதப்பட்டது என்றால் ஆம். ஒப்பந்தம் எழுதும் போதே அசல் பத்திரம் என்னிடம் கொடுக்கபட்டதா என்றால் ஆம். அதிலிருந்து பத்திரங்கள் என்னிடம் தான் இருந்தது வழக்கு போடும் போது வழக்கறிஞரிடம் கொடுத்தேன். 1978ல் போடப்பட்ட ஒப்பந்தத்தை வைத்து கொண்டு அசல் பத்திரங்கள் என்னிடம் இருந்ததால் 2015ல் ஒரு பெய்யான தாவா போட்டுள்ளேன் என்றும் , தாவா காலவரை சட்டத்தால் பாதிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. தயானந்த முதலியாருக்கு ரூ.500யை நான் கொடுத்த பிறகு அரை அதன் பிறகு நான் பார்க்கவில்லை. முதன் முதலில் ஒப்பந்தத்தில் போடப்பட்டுள்ள தயானந்த முதலியாரின் கையெழுத்தும் அதே ஒப்பந்தத்தில் மேற்குறிப்பில் காணப்படும் கையெழுத்து வேறு வேறு என்றும் மேற்குறிப்பில் தயானந்த முதலியார் கையெப்பம் இடவில்லை என்றால் சரியல்ல. தயானந்த முதலியாரிடம் ஒப்பந்தம் போடப்பட்ட பொழுது கொடுத்த அட்வான்ஸ் தொகையை தவிர வேறு எப்பொழுதும் அவரிடம் மீதி தொகை செலுத்தப்படவில்லை என்றும், ஒப்பந்தத்தில் காணப்படும் மேற்குறிப்புகள் என்னால் தயாரிக்கபட்டவை என்றால் சரியல்ல. நான் தயானந்த முதலியாரிடமோ அல்லது அவரது மனைவியிடமோ எப்பொழுதும் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. நான் பணம் கொடுத்த பிறகு கடைசியாக 15.07.1979 அன்று மகன்களை அழைத்து வந்து கிரைய பத்திரம் எழுதி கொடுப்பதாக தயானந்த முதலியார்

தெரிவித்தார். அதன் பிறகு அவர் வரவில்லை அதன் பிறகு ஊருக்கு அவரது மகன்கள் நல்லது கெட்டதுக்கு வரும் போதெல்லாம் நான் இது குறித்து கேட்டபொழுதெல்லாம் தகப்பனார் மூலமாக கிரைய பத்திரம் எழுதி கொடுப்பதாக தான் அவர்கள் சொன்னார்கள். இன்றைய தேதியில் இருந்து சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் தயானந்த முதலியாரின் மகன்கன் எங்கள் ஊரில் ஒரு திருமணத்திற்கு வந்த போது நான் கேட்டேன் அதற்கு அவர்கள் மற்றவர்களையும் அழைத்து வந்து பத்திரம் எழுதி கொடுப்பதாக தான் சொன்னார். 1979க்கு பிறகு தயானந்த முதலியார் அந்த ஊரிலேயே இல்லை. சொத்து என்னிடம் இருந்ததால் அதன் பிறகு அவர்களை அணுகி நான் கேட்கவில்லையா என்றால் சரி. சொத்து என்னுடையது என்று ஆகிவிட்டதால் அதன் பிறகு தயானந்தமுதலியார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வீல்லை என்றால் ஆம். கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் சொத்தின் சுவாதினமும் என்னிடம் இருந்தது கிடையாது என்றும் கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் சொத்தின் உரிமையாளர் நான் என்று சட்டப்படி சொல்லமுடியாது என்றால் தவறு. தாவா சொத்து குறித்து கிரைய ஒப்பந்தம் போட்ட பின்பு அட்வான்ஸ் தொகையை தவிர வேறு எந்த பணமும் தயானந்த முதலியாருக்கு கொடுக்கபடவில்லை என்றும், ஒப்பந்தத்திற்கு பிறகும் அவர் தான் சுவாதீனத்தில் இருந்து அவரது இறப்புக்கு பின்பு தாவா சொத்து அவரது வாரிசுகளிடம் இருந்து 9வது பிரதிவாதி சொத்தை கிரையம் பெற்று அவர் தான் சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் தவறு. தாவாவில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் தவறு. தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடத்தில் இல்லாததால் 9வது பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் நான் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் தவறு.